செ.வெ.எண்: 10 நாள்: 05.01.2017

## புதுக்கோட்டை மாவட்டத்தில் மொத்தம் 1263359 வாக்காளர்கள் உள்ளனர் - மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் சிறப்பு சுருக்கத்திருத்தம் 2017 முன்னிட்டு அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சியினர் முன்னிலையில் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (05.01.2017) நடைபெற்றது.

இந்த இறுதி வாக்காளர் பட்டியலை மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சியினர் முன்னிலையில் வெளியிட்டு பேசியதாவது:

01.01.2017ம் தேதியை தகுதி ஏற்படுத்தும் நாளாக கொண்டு வாக்காளர் பட்டியல்கள் சிறப்பு சுருக்கமுறை திருத்தம் 2017 செய்ய இந்திய தேர்தல் ஆணையத்தால் உத்தரவிடப்பட்டதை தொடர்ந்து நமது மாவட்டத்திலுள்ள 6 சட்டமன்ற தொகுதிகளுக்கும் உரிய வரைவு வாக்காளர் பட்டியல்கள் 01.09.2016 அன்று வெளியிடப்பட்டது. இதன்படி 178.கந்தர்வக்கோட்டை (தனி) சட்டமன்ற தொகுதியில் 94346 ஆண் வாக்காளர்களும், 91784 பெண் வாக்காளர்களும், 7 மூன்றாம் பாலினத்தவர்களும் என மொத்தம் 186137 வாக்காளர்களும், 179.விராலிமலை சட்டமன்ற தொகுதியில் 101114 ஆண் வாக்காளர்களும், 100756 பெண் வாக்காளர்களும், 3 மூன்றாம் பாலினத்தவர்களும், என மொத்தம் 201873 வாக்காளர்களும், 180.புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதியில் 111776 ஆண் வாக்காளர்களும், 115515 பெண் வாக்காளர்களும், 7 மூன்றாம் பாலினத்தவர்களும், என மொத்தம் 227298 வாக்காளர்களும், 181. திருமயம் சட்டமன்ற தொகுதியில் 101780 ஆண் வாக்காளர்களும், 105179 பெண் வாக்காளர்களும், 0 மூன்றாம் பாலினத்தவர்களும், என மொத்தம் 206959 வாக்காளர்களும், 182.ஆலங்குடி சட்டமன்ற தொகுதியில் 98661 ஆண் வாக்காளர்களும், 99599 பெண் வாக்காளர்களும், 1 மூன்றாம் பாலினத்தவர்களும், என மொத்தம் 198261 வாக்காளர்களும், 183.அறந்தாங்கி சட்டமன்ற தொகுதியில் 105799 ஆண் வாக்காளர்களும், 106670 பெண் வாக்காளர்களும், 0 மூன்றாம் பாலினத்தவர்களும், என மொத்தம் 212469 வாக்காளர்களும் என 6 சட்டமன்ற தொகுதிகளிலும் 613476 ஆண் வாக்காளர்களும், 619503 பெண் வாக்காளர்களும், 18 மூன்றாம் பாலினத்தவர்களும் என மொத்தம் 1232997 வாக்காளர்கள் உள்ளனர்.

இதனை தொடர்ந்து 01.09.2016 முதல் 30.09.2016 வரை அனைத்து வாக்குச்சாவடி மையங்கள், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்கள், அனைத்து வட்டாட்சியர் மற்றும் நகராட்சி அலுவலகங்களில் தகுதியுடைய நபர்களிடமிருந்து வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தங்கள் மற்றும் இடமாற்றம் செய்ய கீழ்க்கண்ட எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் பெறப்பட்டது. இதன்படி 178.கந்தர்வக்கோட்டை (தனி) சட்டமன்ற தொகுதியில் படிவம் 6ல் 6210 எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு இதில் 5991 விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டது. படிவம் 7 மற்றும் suo moto நீக்கல் படிவத்தில் 468 எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு இதில் 468 விண்ணப்பங்களும் ஏற்கப்பட்டது. படிவம் 8 திருத்தம் விண்ணப்பத்தில் 614 எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு 614 விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

படிவம் 8ஏ திருத்தம் விண்ணப்பத்தில் 209 விண்ணப்பங்கள் பெறப்பட்டு 209 விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன் மூலம் மொத்தம் 7969 விண்ணப்பங்கள் பெறப்பட்டு 7750 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

179.விராலிமலை சட்டமன்ற தொகுதியில் படிவம் 6ல் 6182 எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு இதில் 6124 விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டது. படிவம் 7 மற்றும் suo moto நீக்கல் படிவத்தில் 588 எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு இதில் 588 விண்ணப்பங்களும் ஏற்கப்பட்டது. படிவம் 8 திருத்தம் விண்ணப்பத்தில் 567 எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு 567 விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. படிவம் 8ஏ திருத்தம் விண்ணப்பத்தில் 137 விண்ணப்பங்கள் பெறப்பட்டு 137 விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன் மூலம் மொத்தம் 8062 விண்ணப்பங்கள் பெறப்பட்டு 8004 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

180.புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதியில் படிவம் 6ல் 5244 எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு இதில் 4872 விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டது. படிவம் 7 மற்றும் suo moto நீக்கல் படிவத்தில் 1905 எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு இதில் 1904 விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டது. படிவம் 8 திருத்தம் விண்ணப்பத்தில் 1011 எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு 1011 விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. படிவம் 8ஏ திருத்தம் விண்ணப்பத்தில் 353 விண்ணப்பங்கள் பெறப்பட்டு 353 விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன் மூலம் மொத்தம் 10418 விண்ணப்பங்கள் பெறப்பட்டு 10044 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

181. திருமயம் சட்டமன்ற தொகுதியில் படிவம் 6ல் 7082 எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு இதில் 6858 விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டது. படிவம் 7 மற்றும் suo moto நீக்கல் படிவத்தில் 169 எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு இதில் 169 விண்ணப்பங்களும் ஏற்கப்பட்டது. படிவம் 8 திருத்தம் விண்ணப்பத்தில் 1013 எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு 1013 விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. படிவம் 8ஏ திருத்தம் விண்ணப்பத்தில் 341 விண்ணப்பங்கள் பெறப்பட்டு 341 விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன் மூலம் மொத்தம் 8774 விண்ணப்பங்கள் பெறப்பட்டு 8550 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

182.ஆலங்குடி சட்டமன்ற தொகுதியில் படிவம் 6ல் 4983 எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு இதில் 4851 விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டது. படிவம் 7 மற்றும் suo moto நீக்கல் படிவத்தில் 1052 எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு இதில் 1052 விண்ணப்பங்களும் ஏற்கப்பட்டது. படிவம் 8 திருத்தம் விண்ணப்பத்தில் 833 எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு 833 விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. படிவம் 8ஏ திருத்தம் விண்ணப்பத்தில் 168 விண்ணப்பங்கள் பெறப்பட்டு 168 விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன் மூலம் மொத்தம் 8088 விண்ணப்பங்கள் பெறப்பட்டு 7956 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

183.அறந்தாங்கி சட்டமன்ற தொகுதியில் படிவம் 6ல் 6045 எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு இதில் 5968 விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டது. படிவம் 7 மற்றும் suo moto நீக்கல் படிவத்தில் 194 எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு இதில் 121 விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டது. படிவம் 8 திருத்தம் விண்ணப்பத்தில் 808 எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு 808 விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. படிவம் 8ஏ திருத்தம் விண்ணப்பத்தில் 131 விண்ணப்பங்கள் பெறப்பட்டு 131 விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன் மூலம் மொத்தம் 7372 விண்ணப்பங்கள் பெறப்பட்டு 7149 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மேலும் 6 சட்டமன்ற தொகுதிகளிலும் மொத்தம் படிவம் 6ல் 35746 எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு இதில் 34664 விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டது. படிவம் 7 மற்றும் suo moto நீக்கல் படிவத்தில் 4376 எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு இதில் 4302 விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டது. படிவம் 8 திருத்தம் விண்ணப்பத்தில் 4846 எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு 4846 விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. படிவம் 8ஏ திருத்தம் விண்ணப்பத்தில் 1339 விண்ணப்பங்கள் பெறப்பட்டு 1339 விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன் மூலம் மொத்தம் 50683 விண்ணப்பங்கள் பெறப்பட்டு 49453 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இவ்வாறு பெறப்பட்ட விண்ணப்பங்கள் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு தகுதியுடைய விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி இன்று (05.01.2017) இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி 178.கந்தர்வக்கோட்டை (தனி) சட்டமன்ற தொகுதியில் 96720 ஆண் வாக்காளர்களும், 94930 பெண் வாக்காளர்களும், 10 மூன்றாம் பாலினத்தவர்களும் என மொத்தம் 191660 வாக்காளர்களும், 179.விராலிமலை சட்டமன்ற தொகுதியில் 103493 ஆண் வாக்காளர்களும், 103913 பெண் வாக்காளர்களும், 3 மூன்றாம் பாலினத்தவர்களும், என மொத்தம் 207409 வாக்காளர்களும், 180.புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதியில் 113010 ஆண் வாக்காளர்களும், 117248 பெண் வாக்காளர்களும், 8 மூன்றாம் பாலினத்தவர்களும், என மொத்தம் 230266 வாக்காளர்களும், 181. திருமயம் சட்டமன்ற தொகுதியில் 104743 ஆண் வாக்காளர்களும், 108904 பெண் வாக்காளர்களும், 1 மூன்றாம் பாலினத்தவர்களும், என மொத்தம் 213648 வாக்காளர்களும், 182.ஆலங்குடி சட்டமன்ற தொகுதியில் 100230 ஆண் வாக்காளர்களும், 101830 பெண் வாக்காளர்களும், 0 மூன்றாம் பாலினத்தவர்களும், என மொத்தம் 202060 வாக்காளர்களும், 183.அறந்தாங்கி சட்டமன்ற தொகுதியில் 108364 ஆண் வாக்காளர்களும், 109951 பெண் வாக்காளர்களும், 1 மூன்றாம் பாலினத்தவர்களும், என மொத்தம் 218316 வாக்காளர்களும் என 6 சட்டமன்ற தொகுதிகளிலும் 626560 ஆண் வாக்காளர்களும், 636776 பெண் வாக்காளர்களும், 23 மூன்றாம் பாலினத்தவர்களும் என மொத்தம் 1263359 வாக்காளர்கள் உள்ளனர்.

இதன் மூலம் நமது மாவட்டத்தில் புதிய வாக்காளர்கள் 34664 பேர் உள்ளனர். இதில் 18-19 வயதிற்குட்பட்டவர்கள் 11124 நபர்கள் ஆவர். புதிதாக சேர்க்கப்பட்டுள்ள வாக்காளர்களுக்கு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை தேசிய வாக்காளர் தினமான 25.01.2017 தேதியன்று அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலமாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, புதுக்கோட்டை சார் ஆட்சியர் திரு.எஸ்.பி.அம்ரித்,இ.ஆ.ப., இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.வடிவேல்பிரபு, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர் திரு.மாரியப்பன் (அ.இ.அ.தி.மு.க), திரு.நயினார்முகம்மது (தி.மு.க.), திரு.இப்ராஹிம்பாபு (காங்கிரஸ்), திரு.இராமச்சந்திரன் (சி.பி.ஐ), திரு.ஜுவா (பகுஜன் சமாஜ்) மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**